# சாட்சிய வாக்குமூலம்

## மாவட்ட  மற்றும் அமர்வு நீதிமன்றம், மயிலாடுதுறை.

முன்னிலை:-  முனைவர் .L.S. சத்தியமூர்த்தி, எம்.ஏ., எம்.எல்., பி.எச்.டி.,

| | | | |
|---|---|---|---|
| பி.வா.சா. | 1 | நாள் | : 17.02.2026 |
| அசல் வழக்கு எண். | 119/2024 | | |
| பெயர் | வனிதா | த/பெ | |
| வயது | | தொழில் | இளநிலை பொறியாளர் |
| கிராமம் | | தாலூக்கா | |

சாட்சி  அழைக்கப்பட்டு  உறுதி மொழிசெய்யப்பட்டு முதல் விசாரணை செய்யப்படுகிறது.

**முதல் விசாரணை:**

நான் இவ்வழக்கில்  3ம் பிரதிவாதி அலுவலகத்தில் நான் இளநிலை பொறியாளர் இயக்குதல் மற்றும் பராரிப்பு பிரிவில் பணியாற்றி வருகிறேன்.  இந்த வழக்கின் சங்கதிகள் கோப்புகளின் அடிப்படையில் 3ம் பிரதிவாதி சார்பாக  முதல் விசாரணை சங்கதிகளை நிரூபண  வாக்குமூலமாக  தாக்கல் செய்துள்ளேன். அதிலுள்ள கையெழுத்து என்னுடையதுதான். அதிலுள்ள சங்கதிகள் என்னால் சொல்லப்பட்டவைதான்.  வழக்கை தள்ளுபடி செய்ய வேண்டுகிறேன்.

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

1ம் வாதியின் கணவர் மகேந்திரன் மின்சாரம் தாக்கி உயிரிழந்ததாக  முதல் தகவல் அறிக்கையில் சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான்.  நான் சம்பவ இடத்தை பார்வையிட்டேன். அது மயிலாடுதுறை செம்பனார்கோயில் மெயின்ரோடு ஆகும்.  அங்கு வாதியின் வீட்டருகே உயர் அழுத்த மின்பாதை செல்கிறது என்றால் சரிதான்.  இவ்வாறு உயர் அழுத்த மின்பாதை என்பது பூமியிலிருந்து குறைந்த பட்சம் சுமார் 25 அடி உயரத்தில் இருக்கு வேண்டுமென்றால் சரிதான்.  வாதியின் வீடு தரைதளம் மட்டும் கொண்ட வீடு என்றாலும் மாடி கிடையாது என்றாலும் சரிதான்.  இவ்வாறு உயர் மின்னழுத்தபாதை பூமியிலிருந்து 25 அடி உயரத்திலிருந்திருந்தால் அந்த கம்பி தொங்கி வாதியின் வீட்டின் அருகே

தாழ்வாக சென்று வாதியின் கணவர் இறக்க வாய்ப்பில்லை என்றால் சரியல்ல. இறந்தவரின் உடல் சடலக்கூறாய்வு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். மின்சாரம் தாக்கி ஒரு நபர் உயிரிழந்தால் எங்களுக்கு காவல் துறையிலிருந்து தகவல் அனுப்பபடும் என்றால் சரிதான். இந்த வழக்கிலும் அவ்வாறு தகவல் அனுப்பப்ட்டது என்றாலும் அதனால் தான் வழக்கிற்காக தகவல் வரவில்லை என்றால் பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. உயர் அழுத்த மின்பாதை சரியாக பராமரிக்கப்படவில்லை என்றால் இளநிலை பொறியாளர், முதுநிலை பொறியாளர் மீது துறைரீதியான நடவடிக்கை எடுக்கப்படும் என்றால் சரிதான். காவல் துறையிலிருந்து எங்களுக்கு தகவல் கிடைத்தும் துறைரீதியான நடவடிக்கை எடுக்கப்படும் என்பதால் அதனை மறைத்து விட்டோம் என்றால் அது சரியல்ல. இந்த விபத்து என்பது உயர் அழுத்த மின்கம்பி தாக்கியதால் ஏற்பட்டது என்றால் அதற்கான தகவல் எங்களுக்கு கிடைக்கவில்லை. விபத்து நடந்தவுடன் வாதிகள் எங்களுக்கு தகவல் தெரிவித்தார்கள் என்றால் சரியல்ல. அதனடிப்படையில் தான் நான் சம்பவ இடத்தை சென்று ஆய்வு செய்தேன் என்றால் சரியல்ல. மின்சார வாரியம் நஷ்ட ஈடு கொடுப்பதிலிருந்து தவிர்ப்பதற்காக நான் உண்மையை மறைத்து பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. முதல் தகவல் அறிக்கையில் சொல்லப்பட்டுள்ள விவரங்கள் யுகத்தின் அடிப்படையில் சொல்லப்பட்டவை என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. உயர் மின்னழுத்த மின்பாதையில் சென்ற கம்பி தாக்கி வாதியின் கணவர் இறந்ததால் எங்கள் துறையும் தமிழ்நாடு அரசும் நஷ்ட ஈடு கொடுக்க வேண்டுமென்றால் அது சரியல்ல.